12th November 1965]

மண்ணெண்ணெயையும் கலக்கிருர்கள். அதைப்போல நம்முடைய ஸ்டேட் பஸ்களிலும் மண்ணெண்ணெயை கலந்து ஓட்ட அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : டீசலோடு மண்ணெண்ணெயைக் கலந்து ஓட்டினுல் இன்ஜினில் மண்ணைப் போட்ட மாதிரி தான். அதனுல் சர்க்கார் அம்மாதிரி செய்ய உத்தேசம் இல்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : பஸ்களிலே 'சீட்டிங் அரேன்ஜ்மெண்ட்' முன்பாக இருக்க வேண்டுமென்று ஏதாவது உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முன்பே உத்தரவு போடப்பட்டு இருக்கிறது. நீண்ட தூரம், அதாவது, 70-75 கிலோ மீட்டருக்கு மேல் ஓடும் பஸ்களில் சீட் முன்பாக இருக்கவேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிருேம்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, செய்யாரிலிருந்து சென்னைக்கு 100 கிலோ மீட்டர் இருக்கிறது. இதற்கு பழைய ரேட் படி 2½ ரூபாய் வாங்கவேண்டும். ஆனுல், 2 ரூபாய்தான் நெடுங்காலமாக வாங்கிக்கொண்டு வருகிருர்கள். அவர்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய தற்போதுள்ள கட்டணத்திற்கு மேலேயே இன்னும் வசூலிக்க சர்க்கார் அனுமதித்திருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது சரி அல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். யாரோ ஒருவர் 2 ரூபாய் கட்டணம் வசூலிக்கிருரா இல்லையா என்ற விவரம் எனக்குத் தெரியாது. பொதுவாக, ஒரு பஸ் ஓட்டவேண்டுமென்று சொன்னுல், எண்ணெய் செலவு, மெய்ன்டினென்ஸ், ஸ்டாஃப் செலவு இவையெல்லாம் கணக்குப் பார்த்துத் தான் கட்டணம் நிர்ணயம் செய்ய முடியுமே தவிர, யாரோ ஒருவர் எந்த முறையிலோ, எப்படியோ ஓட்டுகிருர், அம்மாதிரி ராஜ்ய பஸ்களை ஓட்டவேண்டுமென்று சொன்னுல், கேடான முறைதான் வந்துவிடும்.

சட்டச்சொற்கள் அகராதி

*** 491 கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழில் சட்டச் சொற்கள் அகராதியை உருவாக்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட தனிக்குழுவின் வேலை முடிந்துவிட்டதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது அச்சட்டச் சொற்கள் அகராதி வெளியிடப்படும் ?

(உ) அக்குழுவில் பணியாற்றுபவர்களின் பெயர்கள் யாவை ?

[12th November 1965

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No The work has not yet been completed.

(b) Does not arise at present.

(c) 1. Director of Legal Studies, Madras (Chairman).

2. Sri A. Palaniswami, Professor, Law College.

3. Secretary to Government, Law Department.

4. Dr. M. Varadharajan, Professor of Tamil, University of Madras.

5. Dr. A. Chidambaranathan, M.L.C.

6. Sri R. Parthasarathy, Assistant Director (Translation).

7. Sri R. V. Krishna Iyer.

8. Sri P. N. Appuswamy.

9. Srimathi Soundaram Kailasam.

10. Sri M. Shanmugasubramaniam, Deputy Secretary, Legislative Assembly Department.

11. Sri V. Balasubramaniam (Retired Senior Tamil Translator to Government).

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட சொற்கள் அகராதி உருவாவதற்கான கால இலக்கு ஏதாவது வகுக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது உருவாக்கப்படுகிற அகராதி எப்போது வெளிவருமென்ற தன்மையாவது தெரிய வருகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒவ்வொரு லீகல் டெர்முக்கும் சரியான தமிழ் சொல் போடுவது முக்கியம். கலெக்ஷன் **A to D** வந்திருக்கிறது. அதற்கப்புறம் லீகல் டெர்முக்கு பொருள் உரை இருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு இன்னும் விரிவான வகையிலே இது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. **A to N** வரை மொழி பெயர்ப்பு ஆகி இருக்கிறது. எப்போது முடியும் என்று சொல்வதற்கு இல்லை. மத்திய அரசாங்கம் 'அஃபிஷியல் லாங்குவேஜ் லெஜிஸ்லேடிவ் கமிஷன்' அமைத்திருக்கிறார்கள். அம்மாதிரி இந்த மாநிலத்திற்கு ஒரு தனிக் கமிஷன் நியமித்து சீக்கிரத்திலே மொழி பெயர்ப்பை முடிக்கலாம் என்பது அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, ஆங்கிலச் சொற்கள் தமிழிலே வரவேண்டும் என்பதற்காகத்தான் இந்த மொழிபெயர்ப்பு செய்கிறது. ஆங்கிலச் சொல்லுக்கு ஏற்ற தமிழ்ச் சொல் வராவிட்டால், சமஸ்கிருதச் சொல் அந்த இடத்தில் விழுவதைக் காட்டிலும் பழக்கப்பட்ட ஆங்கிலச் சொற்களே இருக்கலாம். ஆகவே, தமிழ்ச் சொற்கள் கிடைக்காவிட்டால் பழக்கப்பட்ட ஆங்கிலச் சொற்களையே உபயோகிக்க வழிவகை செய்யப்படுமா ?

12th November 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆங்கிலமோ, சமஸ்கிருதமோ எது மக்களுக்கு சுலபமாக புரியக்கூடியதோ அதுதான் வைத்துக்கொள்ளப்படுகிறது.

திரு. து. ப. அழகமுத்து : அகில இந்திய அடிப்படையில் சொற்கள் அமைக்கப்படுகிறதா, அல்லது நேரான தமிழில் அமைக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் தமிழில்தான் அமைக்கப்பட்டு வருகிறது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, தமிழில் பிற மொழிகள் கலப்பதற்குத் தடை இல்லை. தொல்காப்பியத்தில் 'வடசொல் கிளவி வடஎழுத்து ஒரீஇ' என்ற விதி இருக்கிறது. நேரான தமிழ்ச் சொல் கிடைக்காத நேரத்தில், பழக்கப்பட்ட ஆங்கிலச் சொல்லை வைத்துக்கொள்ளலாம். இதற்கான முயற்சி எடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கு தொல்காப்பியத்தைக் கொண்டுவருவது அவசியம் இல்லை. எந்தச் சொல்லை உபயோகித்தால் மக்கள் புரிந்து கொள்வார்கள் என்பதுதான் முக்கியம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் வரும் மசோதாக்கள் தமிழிலேயே வர முயற்சி எடுத்துக்கொண்டால் நீதிபதிகள் வழக்கறிஞர்கள் அவைகளை நன்ருக பயன்படுத்திக்கொள்வதற்கு முடியும். ஆதலால், மசோதாக்களை தமிழிலேயே பிரசுரிக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த முயற்சியில் ஈடுபடுவதற்கு முன்பு இந்த வேலை முடிய வேண்டும். இல்லையென்ருல் மசோதாவில் தவறுதலான எழுத்து வந்து, விபரீதப் பொருள் ஏற்பட்டு விட்டால், பின்னல் பெரும் பாதகம் ஏற்படும்.

திரு. வை. சங்கரன் : ஆங்கில மொழி அன்னிய மொழி என்பதாலும், சமஸ்கிருத மொழி நம் நாட்டு மொழி என்பதாலும், சரியான தமிழ்ச் சொற்கள் கிடைக்காதபோது ஆங்கிலச் சொற்களை உபயோகிக்கலாம் சமஸ்கிருதத்தை விட்டு விட்டு, என்று கனம் உறுப்பினர் புலவர் கா. கோவிந்தன் சொன்ன கருத்தை புறக்கணித்து விட்டு நம் நாட்டு மொழியான சம்ஸ்கிருதத்தையே உபயோகிப்பதற்கு சர்க்கார் யோசனை செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே கூறியிருக்கிறேன். சமஸ்கிருதம் நன்ருயிருக்குமா, ஆங்கிலத்தை எடுத்துக்கொள்வதா, அல்லது உருதுச் சொல்லை எடுத்துக்கொள்வதா என்பதல்ல. எந்தச் சொல்லை மக்கள் சுலபமாக புரிந்துகொள்வார்களோ, அதைப் பார்த்துத்தான் முடிவு செய்யப்பட்டு வருகிறது.